Koviloor Digital Library

நினைத்தது நடக்கும்; கேட்டது கிடைக்கும்



வலயமாநகர்

மலையாண்டி விநாயகர் பதிகம் & திருப்புகழ்

ACC No 33854
Q1.4V33-2

Koviloor Digital Library

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR A. No. 33854 LIBRARY KOVILOOR

உ
சிவமயம்

பள்ளத்தூர்
உ.அ.உ.க.அ.முரு.அ. முருகப்பன் - உமா
தம்பதியரின் மகன்
எந்திரன் பொறியாளர் **அடைக்கப்பன் (எ) கண்ணன்**
வலயபட்டி
இராம. அண.இராம. நாகப்ப செட்டியார் - உமா
தம்பதியரின் மகள்
மருத்துவர் **விசாலாட்சி**
ஆகிய இருவரின் திருமணம் நடைபெறும்
சார்வரி ஆண்டு தை மாதம் 21 ஆம் நாள்
(03-02-2021) புதன்கிழமை நாளில் வெளியிடப் பெறுகின்ற

வலயமாநகர்
மலையாண்டி விநாயகர் பதிகம்
& திருப்புகழ்

சந்தக்கவிஞர் காரைக்குடி
அரு.அ.அரு.ராம. அருணாசலம் செட்டியார் அவர்களால்
இயற்றப் பெற்ற இதன் முதற்பதிப்பு இரங்கோன் மொர்க்கண்டையில்
பிரிண்டிங் ஓர்க்ஸ் அச்சகத்தில் 1910ல் பதிக்கப் பெற்று
வெளியிடப்பெற்றது.

மாப்பிள்ளையின் அய்யாமார்கள்
உ.அ.உ.க.அ.முரு. அடைக்கப்ப செட்டியார் &
உ.அ.உ.க.அ.முரு. லெட்சுமணன் செட்டியார் ஆகியோரின்
தாயாரான **உமையாள் ஆத்தா** அவர்களின்
தகப்பனார் இயற்றிய இந்நூலை

வெளியிட்டு மகிழ்வித்து, மகிழ்பவர்கள் :
அரு.அ.அரு.ராம. அருணாசலம் செட்டியாரின் மூத்த மகளான
(காரைக்குடி மெ.செ.அ.மெ.பழ) **மீனாட்சி ஆத்தா** அவர்களின்
குமாரரான பாபா அடிசூடி, கம்பன் அடிசூடி
பழ பழனியப்பன் & தெய்வானை

Koviloor Digital Library

23854

உ
சிவமயம்
வேலும் மயிலும் துணை

வலயமாநகர்

மலையாண்டி விநாயகர் பதிகம்

காப்பு வெண்பா

கன்னல் மொழிசேர் கலைமகளும் பூமகளும்
மன்னி வளர்வலய மாநகரில் - துன்னுமலை
ஆண்டிபதி கம்அதனை யாம்புகல வந்தமலை
ஆண்டிபத மேதுணை அது ஆம்.

நூல்

கலைமாது பணிகின்ற மலைமாது பெறு ஐங்
கரத்தனே கடவு ளர்க்கா(க்)
கயமுகனை அடுசமரில் மடிய எதிர் கணேசனே
கருணை மழை பொழியும் முகிலே
சிலைதனைச் சிலை எனக் கொண்ட சிவன் உதவ வரு
சேயனே நால்வா யனே
சேவலங் கொடி உடைய கோ உனை அழைக்கத்
தினைப்புனம் சூழ்ந்து இருக்கும்

மலைமேவு சுனையோராம் மதமிகும் கரியதாய்
வந்தங்கு வள்ளி என்னும்
மாதுஅவன் தோள்சார மணமுடித்து அருள்செயும்
மாவதனம் இலகு மணியே
பலகலைகள் அறியாத சிறியனேன் என்னினும்
பட்சம் வைத்தாளும் அளகா
பதியைநிகர் நவமணிகள் நிதிகள் உறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே 1

Koviloor Digital Library

மலையாண்டி பதிகம்

கை ஆறோடு ஆறு உடைய ஐயனின் சோதரா
கங்காளன் உமையி னோடு
கவறுவிளை யாடையில் மனைவியவள் வென்றிடக்
கண்டுநகை செய்த ருகினில்
ஓய்யார மாயுறுந் தேவிநீ தோற்றை என்று
ஓதஅவள் தானும் இங்கே
உள்ளவரை வினவினால் நன்றாய்வி ளங்கும் என
உனது அண்ணனைக்கேள் எனப்

பொய்யாது சொல் என்ன மாயவன் சூதுடைப்
போர்பரமன் வென்றான் எனப்
புவனங்கள் ஈன்றிடுங் கன்னிஅவ் அண்ணனைப்
பொங்கரவம் ஆவாய் எனப்
பைஅரவம் ஆகிவரு மாமனைக் காத்தருள் செய்
பாலன் எனை ஆளும் அளகா
பதியை நிகர் நவமணிகள் நிதிகள் உறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே 2

கோடானு கோடி பேருக்கு அஞ்சாத அசுரனைக்
கோட்டினால் கொன்ற முதலே
குவலயம் எலாம் தொழும் ஆதியே சோதியே
குஞ்சர முகத்து ஐயனே
தேடாது தேடுவார் தேட்டற்ற தேட்டமே
தேடஅரிய ஞான மணியே
சித்தம்வைத்து ஆள்என்று நித்தநித்தம் வந்து
திருஅடியில் அலறி வீழ்ந்து

வாடாது வாடும் என் முகவாட்டமும் கண்டு
வாடாமல் இருஎன்ன நீ
மாசற்ற கருணையோடு அருள்செயாது இன்னமும்
வாளா இருப்ப தழகோ
பாடான பாடுகள் படவும்முடி யாதுஇனிப்
பக்ஷம் வைத்து அருள் செய் அளகா
பதியைநிகர் நவமணிகள் நிதிகள்உறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே 3

Koviloor Digital Library

மலையாண்டி பதிகம்

பணிசெய்து வருவிபீடணன் இலங்கை ஏகுநாள்
பார்த்து இராமன் கழல்களைப்
பணிந்து ஐயநினதுபிரி வாற்றலேன் என்னவப்
பரமன் அருள் திருவடியினை
மணிவைத்து இழைத்திட்ட முடிதாங்கு முடிமீது
வைத்துவரு வழிய தனிலே
வான்நாடர் இறை ஏவ மறைஓது சிறுவனாய்
வரஉனைக் கண்டு அன்னவன்

தணிவோடு போற்றியது பூமிமிசை வையாது
சற்றுநில் என்ன வாங்கித்
தரணியில் சீரங்கமாக வைத்து அன்னோன்
தனக்கருள்செய்து ஆளும் முதலே
பணிகள்அணி பரமன்உமை உதவவரு பாலனே
பாலன்எனை ஆளும் அளகா
பதியைநிகர் நவமணிகள் நிதிகள் உறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே. 4

நீர்குமிழி அனையபொய் உடலைநான் நிலையாக
நிற்குமென மின்னார் களின்
நேயமே இன்பம் என அவர்கள் உறும் வீடுகள்
நித்யசா யுச்சியும் என்ன
ஆர்க்கும்அறம் என்று ஒரு காசளவும் ஈயாமல்
அன்னார் தமக்க ளித்தும்
அம்மாதர் ஆசையாம் கடலுள் துரும்புஎன
அழுங்கிக் கிடந்து உழன்ற

மூர்க்கனே என்றாலும் உன் பெருமை பெரியோர்
மொழிந்திடச் சிறிது கேட்டு
மோகமொடு சோகங்கள் தீர்த்துமெய் ஞானமிகு
முத்தமிழும் அருளுவை என்றே
பார்க்குள் ஓடித்தேடி இவண்வந்து நின்றனன்
பாலன்எற்கு அருள்செய் அளகா
பதியைநிகர் நவமணிகள் நிதிகளுறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே. 5

Koviloor Digital Library

மலையாண்டி பதிகம்

சிவன்ஆன நமதுஐயன் நுதலினிற் தோன்றிஎத்
திசையினும் விளையாடும் கால்
தேவர்இந் திரனோடு அமர்செய்து யாழ்வலோன்
செய்பஅவர் தம்மை யாண்டு இவ்
அவனியைத் தரும்அயனை ஓம்எனும் பொருள்வினவி
அரியசிறை தன்னில் வைத்தன்று
அதனைப் படைக்கநம் ஐயன் வேண்டிடுதலால்
அவ்அயன் சிறையை நீக்கி

நவவீரர் கணநாதர் லெக்ஷரொடு நந்திதொழ
நல்கையிலை வீற்று இருந்து
நாரதன் வேள்விவரு தகர்ஏறி உறுசாமி
நாதனின் தமைய எனது
பவமெலாம் போக்கிஇப் போதருள் புரிந்திடப்
பாடுகவி கேட்கும் அளகா
பதியைநிகர் நவமணிகள் நிதிகள்உறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே. 6

மெச்சுநற் பச்சைமயில் ஏறி அக் கயிலையொடு
விண் எட்டு மாதிரத்தை
வேகமொடு முருகவேள் சுற்றிவரு முன்னதாய்
விமலனைச் சுற்றி வந்துஅங்கு
இச்சையுடன் மாங்கனியை வாங்கிமுன் தின்றவா
இமயமலை ஈன்று எடுத்த
எழிலான மகவாகி நம்தந்தை தனைநாடி
இயல்பான தவம் இயற்றி

நச்சைமுன் உண்டஅப் பரனைமண மாலையிடு
நாரி, சிவை, பார்ப்பதி, உமை
நாரணி, கல்யாணி, திரிசூலி, கங்காளி, பரை
ஞாலங்கள் ஈன்று எடுத்த
பச்சைமயிலாம் கன்னி இச்சையுடன் உதவ வரு
பால எனையாளும் அளகா
பதியைநிகர் நவமணிகள் நிதிகள் உறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே. 7

Koviloor Digital Library

மலையாண்டி பதிகம்

பொய்திகழும் வார்த்தையோடு ஊர்க்கெலாம் ஏற்காத
புரட்டினைச் செய்ய எண்ணும்
போகாத இடமெலாம் போகவே எண்ணும் இப்
புவிஎலாம் ஆள எண்ணும்
மெய்திகழும் வார்த்தை சொல எண்ணிடும் சிலசமயம்
மேலான மோக்ஷ வீட்டை
வேண்டிடும் சிலசமயம் மேலவர்கள் உறவினை
விரும்பும்அயில் போலும் விழியில்

மைதிகழும் மாதர்புகழ் பேசிமகிழ் கொண்டிடும்
மறந்தவர் தமைப் பழிக்கும்
மதியைவிட்டு ஒருவழியில் நிற்கின்ற பரிசுத்த
மதியினைத் தந்து ஆளுவாய்
பைதிகழும் விட அரவை அணிபரமன் உதவ வரு
பாலனே செல்வ அளகா
பதியைநிகர் நவமணிகள் நிதிகள்உறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே. 8

கால்ஒத்த வேகமொடு சென்றுலகம் எங்கும்
கலக்கமது செய் அசுரனைக்
கடவுள்சக் கரம்அதனி னாற்கொன்று வருதலைக்
கண்டுமால் அங்கவன் தன்
போல்ஒத்த உருவு எடுத்து அன்னவன் தேவியைப்
புணரஅவள் கண்டு பூவில்
போய் ராமன் ஆகுஎன்று இறந்திடச் சுடலையிற்
போய் மாயவன் புரளவே

சேல்ஒத்த விழிஉமையள் கண்டுவிதை ஒன்றினைத்
திருத்துளவம் ஆவாய் எனச்
செப்பியே போடஅத் துளவமது அணிந்து மயல்
தீர்ந்ததிரு மாலின் மருகா
பால்ஒத்த மொழி கௌரி தரு பால என்மீது
பட்சம் வைத்தாளும் அளகா
பதியை நிகர் நவமணிகள் நிதிகள் உறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே. 9

Koviloor Digital Library

மலையாண்டி பதிகம்

மதியுற்று நதியுற்று மணியுற்று விடமுற்ற
மாபணிகள் தாமும் உற்று
மலருற்று அவ்வழகுற்ற சடையுற்ற பரமற்கு
மைந்தனென வந்து உலகிலே
துதியுற்று வாழ்கின்ற தோன்றலே புலவோர்கள்
தொழுதிடக் கருணை செய்யுந்
துய்யனே கிரிமேவும் ஐயனே எற்கு அருள்செய்
சுகுணனே மணி முத்தமா

நதியுற்ற நாட்டினில் வளமிக்க நிலமுற்ற
நகரங்கள் தன்னில் என்றும்
நாடியறமே செய்யும் நகரம் என வானோரும்
ஞாலமிசை எய்த வளமாம்
பதியுற்ற தனவணிகர் குலம் ஒக்க வாழ்வுறப்
பட்சம் வைத்தாளும் அள்கா
பதியைநிகர் நவமணிகள் நிதிகள் உறும் வலயமா
பதியில் வளர் மலையாண்டியே. 10

முற்றிற்று.

Koviloor Digital Library

வலயபட்டித் திருப்புகழ்

தான தன தத்த தன
தான தன தத்த தன
தான தன தத்த தன - தனதானா

மாமதியை ஒத்தமுக
மோடுகட லைக்கயலை
வாள்அயிலை ஒத்தஇரு - விழியோடே

மாரன்மகு டத்தினொடு
சூதுவரை செப்புஅதனை
வாதுபுரி வட்டமுலை - உறுமானார்

காமம்அதில் நித்தம் அலை
யாமல்உமை சத்திசிவ
காமிதரு புத்ர,அருள் - தருவாயே

காலமுகில் ஒத்த அரி
ஏனஉரு உற்றும்அடி
காணஅரிது உற்றசிவன் - அருள்பாலா

பாமயிலும் நற்கமல
மாமயிலும் முத்தமிழ்சொல்
பாவலர்கள் சித்தமறை - யவரோடே

பாரிதனை ஒத்தகொடை
யாளரொடும் அத்தன்இரு
பாதமல ரைத்தொழுகு - மவர்மேவா

மாமுகில்கள் உற்ற பொழில்
மேவிஅழ குஉற் றெமர்கள்
வாழ் வலய பட்டிவளர் - குமரேசா

மான்உதவு பொற் கொடியை
வானவரி பெற்ற வளை
வாமம் வலம் வைத்ததொரு - பெருமாளே!!

Koviloor Digital Library



Koviloor Digital Library

"நினைத்தது நடக்கும்; கேட்டது கிடைக்கும்"

நேமங்கோயிலோனாய் உதித்து அறம் பல ஆற்றி, காரை நகர் மேவு கொப்புடைய மீனாட்சி ஆலயத்துக் கைங்கர்யம் பலவும் எழிலுற முடித்து, நித்தமும் அவள் அடிக் கமலங் கைதொழுது உண்பதல்லால் கனவிலேனும் உண்ணாத அரு அ அரு இராமசாமிக் குரிசில் பெற்ற அருந்தவப் புதல்வர் அருணாசலனாரும் அக்கொப்புடைய மீனாட்சிக்கு அணிமணிகள், ஆபரணங்கள் பற்பல செய்து, பரம்பரை தர்மகர்த்தாப் பணியும், பாடும் பணியுமே பணியாய் ஆற்றி ஏழு நகர்த் தெய்வங்கள் மீது பதிகங்களும், திருப்புகழ்ப் பாடல்களும் பாடியருளிய, வாக்குப் பொய்யாத வளர்தமிழ்ப் புலவர் அருணாசலனார் இந்நூலாசிரியராவார்.

வளர்திரு அருளும் வலயமாநகர் மலையாண்டியானின் மீது அவர் முதன் முதலில் 1910ல் பாடியருளிய இந்நூலைத் தினந்தோறும் நிறைந்த நம்பிக்கையோடும், மன உறுதியோடும் படிப்போர்க்கு எல்லாம்

நினைத்தது நடக்கும், கேட்டது கிடைக்கும்

என்பது மலையாண்டியானின் சத்யவாக்காகும்; ஆம். அப்படியான அற்புதங்கள் உங்கள் இல்லத்தில் நிகழும்; உள்ளத்திலும் ஊற்றெடுக்கும். நீங்கள் நினைத்துப் பிரார்த்திக்கும் அனைத்தும் நிறைவேறி அமைதியும் ஆனந்தமும் ததும்பிப் பொங்கும்.

SLP KARAIKUDI Tel : 224518